# தூத்துக்குடி மாவட்டம்
# தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
# மாவட்ட இயக்க மேலாண்மை அலகு
# அறிவிக்கை
# வட்டார இயக்க மேலாளர் மற்றும் வட்டார ஒருங்கிணைப்பாளர் காலிபணியிடங்களுக்கான நேரடி நியமனம்

ந.க.எண். அ5/397/2025

நாள்:04 .02.2026

தூத்துக்குடி மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, வட்டார இயக்க மேலாண்மை அலகில் காலியாக உள்ள வட்டார இயக்க மேலாளர் மற்றும் வட்டார ஒருங்கிணைப்பாளர் பணியிடங்களை ஒப்பந்த முறையில் நிரப்பும் பொருட்டு தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்ப்ங்கள் வரவேற்கப்படுகின்றன.

| 1. | பதவியின் பெயர் | வட்டார இயக்க மேலாளர் | வட்டார ஒருங்கிணைப்பாளர் |
|---|---|---|---|
| 2. | தொகுப்பு ஊதியம் | ரூ.15,000/- | ரூ.12,000/- |
| 3. | வயது வரம்பு 01.02.2026 க்குள் | 18 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும்.<br>அதிகபட்ச வயது 30 க்குள் | 18 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும்.<br>அதிகபட்ச வயது 30 க்குள் |
| 4. | காலி பணியிடங்கள் விபரம் | | |

வட்டார இயக்க மேலாளர்:

| வ. எண் | வட்டாரம் | காலிப்பணியிடம் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கருங்குளம் | 1 |
| 2. | திருச்செந்தூர் | 1 |
| 3. | ஓட்டப்பிடாரம் | 1 |
| 4. | புதூர் | 1 |
| 5. | விளாத்திகுளம் | 1 |
| | மொத்தம் | 5 |

வட்டார ஒருங்கிணைப்பாளர்:

| வ. எண் | வட்டாரம் | காலிப்பணியிடம் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஆழ்வார்திருநகரி | 2 |
| 2. | கருங்குளம் | 3 |
| 3. | திருவைகுண்டம் | 3 |
| 4. | சாத்தான்குளம் | 3 |
| 5. | உடன்குடி | 2 |
| 6. | கயத்தார் | 2 |
| 7. | கோவில்பட்டி | 3 |
| 8. | ஓட்டப்பிடாரம் | 1 |
| 9. | புதூர் | 2 |
| 10 | விளாத்திகுளம் | 2 |
| | மொத்தம் | 23 |

| 5. | கல்வித் தகுதி மற்றும் பிறதகுதிகள் | 1. இளங்கலை பட்டம் முடித்தவர் மற்றும் கணினி MS Office குறைந்தபட்சம் 3 மாதம் சான்றிதழ் படிப்பு பயிற்சி பெற்றவராக இருக்க வேண்டும்.<br>2. கணினி மென்பொருள் சார்ந்த கல்வி தகுதி பெற்றவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்<br>3. இரு சக்கர வாகன உரிமம் பெற்றிருக்க வேண்டும் | |
|---|---|---|---|
| 6. | முன்அனுபவம் | மக்கள் அமைப்பு சார்ந்த திட்டங்களில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டு அனுபவம் பெற்று இருக்க வேண்டும். | மக்கள் அமைப்பு சார்ந்த திட்டங்களில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டு அனுபவம் பெற்று இருக்க வேண்டும். |

1. விண்ணப்பதார் தூத்துக்குடி மாவட்டத்தில் காலிப்பணியிட வட்டாரத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
2. கல்வித் தகுதி, இருப்பிடம், சாதிச்சான்று, நன்னடத்தை சான்று, கணினி பயிற்சி பெற்றத்தற்கான சான்று மற்றும் முன்னுரிமை சான்று ஆகியவைகளுக்கு ஆதாரம் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.
3. விண்ணப்ப படிவத்தில் உள்ள விபரங்கள் முழுமையாக பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும். முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் தவறான தகவல்கள் கொண்ட விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்படும்.
4. தகுதியில்லாத மற்றும் காலங்கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
5. எந்த ஒரு விண்ணப்பதையும் நிராகரிக்கும் அதிகாரம் நிர்வாகத்திற்கு உண்டு.

6. தேர்வு /நேர்காணலில் கலந்து கொள்ள பயணப்படி ஏதும் வழங்கப்படாது.

7. தகுதியுள்ள விண்ணப்பதாரருக்கு தேர்வு/ நேர்காணல் நடைபெறும் தனியே தெரிவிக்கப்படும்.

8. நியமனத்தை ரத்து செய்யும் அதிகாரம் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு உண்டு

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய சான்றுகளின் நகல்களுடன் இணை / திட்ட இயக்குநர், மாவட்ட இயக்க மேலாண்மை அலகில் வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் 5.45 வரை நேரிலோ அல்லது இணை இயக்குநர் / திட்ட இயக்குநர், தமிழ்நாடு ஊரக வாழ்வாதர இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், இரண்டாவது தளம், கோரம்பள்ளம் - 628101, தூத்துக்குடி மாவட்டம் என்ற முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாகவோ 16.02.2026 (திங்கட்கிழமை) மாலை 5.45 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும்.

வட்டார இயக்க மேலாளர் மற்றும் வட்டார ஒருங்கிணைப்பாளர் காலிப்பணியிடத்திற்கான விவரங்கள் மற்றும் விண்ணப்ப படிவம் இணை இயக்குநர் / திட்ட இயக்குநர், தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, மற்றும் தூத்துக்குடி மாவட்டத்திற்கான WWW.thoothukudi.nic.in என்ற இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
தூத்துக்குடிமாவட்டம்.

04/02/26